


# World Evangelism

## தமிழகத்தின் சுவிசேஷப்பணியாளர்கள்


R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Mar. 2017


*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M & Nambikkai TV
on Monday &
Saturday 7.30 P.M


*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*


**To**

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA



Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan





தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/


THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்


மரம் 17 | மார்ச் 2017 | கனி 4


**If any man serve me, let him follow me**
John 12:26



**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால்**
**என்னைப் பின்பற்றக்கடவன் – யோவான் 12:26**

## THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16


ஆசிரியர்
B. அர்ஜுனன்

## World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 49 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 49 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தமிழகத்தில் தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாதாந்திர வாசகர் கூட்டங்கள்


13/TWOC
நவம்பர் 2016
கோவை மாவட்டம்


14/TWOC
டிசம்பர் 2016
திருச்சி மாவட்டம்


15/TWOC
ஜனவரி 2017
தருமபுரி மாவட்டம்


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
**Editor**
**B.ARJUNAN**
**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் மாத இதழின் உள்ளே...

ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ்
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 199

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. தேவன் அருளிய வேதம் எவன் இருதயத்தில் இருக்கிறது?
2. ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால் இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
3. நீதியின் பாதையில் என்ன உண்டு, அந்தப் பாதையில் என்ன இல்லை?
4. எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து எதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் என யார் எழுதுவது?
5. நீ தேவாலயத்துக்குப் போகும்போது எதைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதுபோலப் பலியிடுவதைப் பார்க்கிலும் எதுவே நலம்?
6. பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக் கொள்ளுவார்கள் அவர்கள் யார்?
7. உடன்படிக்கையைப் பற்றிக் கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்து கர்த்தர் சொல்லும்போது எப்படிப்பட்ட இடத்தையும், கீர்த்தியையும் கொடுப்பதாக சொல்லுகிறார்?
8. ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இது வரைக்கும் எதிலே இருக்கிறான்?
9. புறஜாதிகளுடைய வீணான தேவர்களுக்குள் மழை வருஷிக்கப்பண்ணத்தக்கவர்கள் உண்டோ?
10. நீதியுள்ளவன் இன்னும் என்ன செய்யட்டும், பரிசுத்தமுள்ளவன் இன்னும் எப்படியாகட்டும்?

**போட்டியாளர்கள் கவனிக்க...** வேதாகமம் பரிசு

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை அறிமுகம் செய்கிறவர்கள் தயவு செய்து இதழை படிக்க விருப்பமில்லாதவர்களுடைய முகவரிகளை எழுதி அனுப்பவேண்டாம். நன்றி. – ஆசிரியர்

### இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

17

நாள்: 29.03.2017 புதன்கிழமை
நேரம்: காலை 11.00 மணி
இடம்: V.பால்ராஜ், சுவிசேஷகர்
கிறிஸ்துவின் சபை
காமராஜர் தெரு
பாண்டமங்கலம் - 637 208
பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம்
தொடர்புக்கு: 9344722561



சிறுவர் பகுதி

## பேலியாளின் மக்கள்

வேதபகுதி: 1சாமுவேல் 2:12-17

ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை. ஏலி யார் என்று தெரியுமா? அவன் தேவனுக்கு ஊழியம் செய்யும் ஆசாரியனாயிருந்தான். அவனுடைய பிள்ளைகளும் அந்த வேலையைச் செய்தார்கள். ஆனால் அவர்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவில்லை. இன்றைக்கும் அப்பா வாத்தியார் என்றால் மகன் முட்டாள், அப்பா போலிஸ் அதிகாரி என்றால் மகன் திருடன், அப்பா டாக்டர் என்றால் மகன் நோயாளி என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். எல்லோரும் அப்படியல்ல ஒரு சிலர். அதைப்போல ஏலி ஆசாரியன் பிள்ளைகளோ கர்த்தரை அறியாதவர்கள்.

இவர்கள் ஜனங்களை நடப்பித்த விதம் என்னவென்றால், எவனாகிலும் ஒரு பலியைச் செலுத்துங்காலத்தில் இறைச்சி வேகும்போது, ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன் கையிலே பிடித்துவந்து, அதினாலே, கொப்பரையிலாவது பானையிலாவது குத்துவான்; அந்த ஆயுதத்தில் வருகிறதையெல்லாம் ஆசாரியன் எடுத்துக்கொள்ளுவான்; அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாம் செய்தார்கள். கொழுப்பைத் தகனிக்கிறதற்கு முன்னும், ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து பலியிடுகிற மனுஷனை நோக்கி: ஆசாரியனுக்குப் பொரிக்கும்படி இறைச்சி கொடு; பச்சை இறைச்சியை அல்லாமல், அவித்ததை உன் கையிலே வாங்குகிறதில்லை என்பான். அதற்கு அந்த மனுஷன் இன்று செய்யவேண்டியபடி முதலாவது கொழுப்பைத் தகனித்துவிடட்டும்; பிற்பாடு உன் மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும்; அவன் அப்படியல்ல, இப்பொழுதே கொடு, இல்லாவிட்டால் பலவந்தமாய் எடுத்துக்கொள்வேன் என்பான்.

ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது; மனுஷர் கர்த்தரின் காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள். பார்த்தீர்களா உற்சாகமாகக் கர்த்தருக்கு காணிக்கை கொடுக்கக் கூடியவர்கள்கூட வெறுப்பாய் எண்ணும்படி நடந்துகொண்டார்கள். இவர்களுடைய பாவம் கர்த்தருடைய பார்வையில் மிகவும் பெரிதாக இருந்தது. நீங்கள் இவ்விதமாக ஊழியம் செய்கிறவர்களைப் பார்த்து, ஏலியின் குமாரர்களுடைய பாவத்தை அவர்களுக்கு நினைப்பூட்டி எச்சரிப்பு செய்யுங்கள். அவர்கள் தேவ கோபத்திற்கு தப்பிக்கொள்ளட்டும்.

**மனப்பாட வசனம்:** "மாறுபாடுள்ள இருதய முடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்; உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்" (நீதி.11:20).


**FORM IV**

| | |
|---|---|
| 1. Place of Publication | : Batlagundu. |
| 2. Periodicity of its Publication | : Monthly. |
| 3. Printer's Name | : R.Sathiyamoorthi. |
| 4. Address | : 14/13/24 Melamanthai St., Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 5. Whether citizen of India | : Yes. |
| 6. Publisher's Name | : B.Arjunan. |
| 7. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |
| 8. Editor's Name | : B.Arjunan. |
| 9. Address | : 17/2/102 D/5 Rajan Nagar Batlagundu-624 202, Dindigul Dt, Tamil Nadu. |

I, B.Arjunan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

sd

Date:28.02.2017 Signature of Publisher.





# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 17 மார்ச் -2017 கனி - 4


ஆசிரியருரை

## என் ஜனம்
## My People



"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின்மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்" (உபா.14:2). கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலரைப் பார்த்து தம்முடைய தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார். இன்றைக்கு நீங்கள் இவர்களைப்போல கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாயிருக்கிறீர்களா? கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களை நேசிக்கவும் போஷிக்கவும் அறிந்திருக்கிறார். அவர்களை எல்லாவிதமாக இக்கட்டுகளுக்கும் விடுவித்து அவர்களை காக்கிறார். ஆகையால் அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருடைய நாமத்தை பூமியெங்கும் பிரஸ்தாபப்படுத்த வேண்டும். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் அப்.பேதுரு (1பேது.2:9). இப்படித் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் பரிசுத்தமான ஜாதியாகவும், அவருக்குச் சொந்தமான ஜனமாகவும் இருக்கிறார்கள். இது எத்தனை ஆசீர்வாதமான வசனம் என்று பார்த்தீர்களா? இப்படி ஆசீர்வாதத்தை பெற்ற ஜாதி வேறே எது? அன்பானவர்களே, இந்தவிதமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தான் இஸ்ரவேலர்கள். ஆனால் அவர்களோ, ஜீவனுள்ள தம்மை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

"என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரே.2:13). அநேகர் ஜீவனுள்ள தேவனை விட்டு விட்டு தங்களுடைய ஆலோசனைப்படி வாழ்க்கையை மாற்றியமைத்துக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்போய்விடுகிறது. நன்கு சம்பாத்தியம் பண்ணுகிறார்கள். ஆனால் கடனாளியாக வாழ்கிறார்கள். தங்களுடைய பிரயாசத்தின் பலன் ஒன்றும் நிற்பதில்லை. தண்ணீர் நிற்காத தொட்டிகளைப்போல அவர்களுடைய வாழ்க்கையில் சம்பாதிக்கிற பணம் அவர்களுக்கு ஆசீர்வதாமாக இருப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் ஜீவத்தண்ணீர்

ஊற்றாகிய தேவனை விட்டுவிட்டார்கள் என்பதே. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனையும் அவருடைய உபதேசத்தையும் விட்டுவிடாது காத்துக்கொள்ளுங்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவைநோக்கி ஜெபிக்கும்போது; "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன் பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" என்று ஜெபித்தார் (யோவா.17:11). தேவன் குறிப்பிட்ட ஜனங்களை தம்முடைய ஜனங்களாக தெரிந்துகொண்டதினிமித்தம் ஆண்டவர் இங்கு ஜெபிக்கும்போது நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் என்று ஜெபிக்கிறார். ஆக, ஆண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களுக்காக மன்றாடியிருக்கிறதை நாம் வாசிக்கிறோம். நாம் தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களை நேசிக்கிறோமா? அவர்களுக்காக ஜெபிக்கிறோமா? அப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் நிமித்தமாக உதவிசெய்கிறோமா? என்பதை எண்ணிப்பாருங்கள். ரூத் என்ற பெண்ணைக்குறித்து நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். அவளோ ஒரு புறஜாதிபெண். தன் கணவன் இறந்தபின் தனது மாமியார் நகோமியை விடாது பற்றிக்கொண்டாள். நகோமியோ அவளைப்பார்த்து; இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப்போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள்; "அதற்கு ரூத்: நான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றாள்" (ரூத் 1:16). இவளுடைய நம்பிக்கையை பார்த்தீர்களா? மற்றவளைப்போல தன் ஜனத்தண்டைக்கும் தன் தேவர்களண்டைக்கும் திரும்பிப்போகாமல், நகோமியை பின்தொடர்ந்தாள். நகோமியின் தேவன் ஜீவனுள்ளதேவன் என்பதையும், நகோமியின் ஜனம் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் என்பதையும் அறிந்தாள். ஆகையால் நகோமியை விடாது பின்பற்றி உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் என்றும் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றும் அன்று எடுத்த தீர்மானத்தில் உறுதியுடனிருந்து தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டாள். இந்தவிதமான உறுதி உங்களுக்குள் இருக்கிறதா? ரூத்தைப்போல தேவனுடைய ஜனங்களோடு சோர்ந்துகொண்டு தேவனை ஆராதித்து வருகிறீர்களா? அப்படிச்செய்யும்போது நீங்களும் ரூத்தைப்போல ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

ரூத்தைப்போல எஸ்தர் என்ற ஒரு பெண்ணைக்குறித்துப்படிக்கிறோம். அவள் தன் ஜனத்தின்மீது மிகவும் பற்றுள்ளவளாக இருந்தாள். ஆமான் என்று சொல்லக்கூடிய மனுஷன் யூதர்களுக்கு விரோதமான காரியங்களை செய்துகொண்டுவந்தான். இதை அறிந்த எஸ்தர் ராஜாவை நோக்கி: "ராஜாவுக்குச் சித்தமாயிருந்து அவர் சமுகத்தில் எனக்குக் கிருபைகிடைத்து, ராஜசமுகத்தில் நான் சொல்லும்வார்த்தை சரியென்று காணப்பட்டு, அவருடைய கண்களுக்கு நான் பிரியமாயிருந்தால், ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரை அழிக்கவேண்டும் என்று அம்மேதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் தீவினையாய் எழுதின கட்டளைகள் செல்லாமற்போகப்பண்ணும்படி எழுதி அனுப்பப்படவேண்டும். என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும் என்றாள்" (எஸ்தர் 8:5,6). யூத குலத்திலே பிறந்து தன் ஜனங்களுக்கு ஏற்படவிருந்த அழிவை



# பாவம்
# Sin

- P.Solomon Selvaraj

## பாவத்தின் சீற்றம்

பிரியமானவர்களே நாம் காணும் இந்த உலகம் விண்ணில் மிதந்தபடியே தன்னை தானே சுழன்றும் சூரியனையும் சுற்றியும் சுழன்றுவரும் ஓர் நீல நிறக் கோளமாகும். பூமி என்ற இந்த அற்புத கோளத்தில் எண்ணற்ற உயிர் இனங்கள், மலைகள், பள்ளத்தாக்குகள், தாவரங்கள், கடல் அமைப்புகள் என அழகாக, அற்புதமாக படைக்கப்பட்டதை நாம் சில நிமிடங்கள் சிந்திப்போமாயின் பிரமிப்பும் ஆச்சரியமும் அடைவோம்.

ஒவ்வொன்றும் ஒரு உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலே படைக்கப்பட்டிருக்கிறது. படைத்தவரே, இவை எல்லாவற்றையும் ஒரு உயர்ந்த குறிக்கோளோடு படைத்து பாதுகாத்தும் வருகிறார். பலகோடி மானிட உயிர்கள் கூட ஒரு உன்னத நோக்கத்தோடு இவ்வுலகில் உடலும், உயிரும் இணையப் பெற்ற அற்புத ஜீவியாக படைக்கப்பட்டிருப்பது விந்தையிலும் விந்தை.

இப்படி அற்புதமாக படைக்கப்பட்ட மனுக்குலம் மகிமையை இழந்து, நிம்மதியை இழந்து சமாதானமின்று வாழ்ந்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம். செய்தித்தாள்களை எடுத்து அன்றாடம் வாசிக்கும்போது எந்த வரலாற்று நூலையும் படிக்கும்போதும் அன்றாடம் நடைபெறும் கொலைகள், களவுகள், சித்திரவதைகள், அடக்குமுறைகள், யுத்தம், பஞ்சம், நோய்கள், மதவெறிகள், காமவெறிகள், வன்புணர்ச்சி, போதை பொருட்கள், விபச்சாரம், கருக்கலைப்பு, வறுமை, வேலை இல்லாதிண்டாட்டம், பயங்கரவாதம், நிரம்பிவழியும் சிறைச்சாலைகள் இவைகள் எல்லாம் கொடிய பாவத்தின் விளைவுகளாக நம் கண்களின் முன்னே அரங்கேறி வருகின்றன.

நாம் காணும் உலகம் தற்போது வன்முறைகளினாலும், அசுத்தத்தினாலும், அக்கிரமத்தினாலும், அநீதியினாலும் நிறைந்திருக்கிறது ஏன் இந்த நிலை? என்ற கேள்வி நல்மனம் கொண்ட பெரியோர்களால் பல ஆண்டுகளாகவே கேட்கப்பட்டு வருகிறது. இவ்வுலகத்தை சீர்திருத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட பல வகையான தத்துவங்கள், சிந்தனைகள் துளிர்விட்டு பல மதங்களாக மாறியுமிருக்கிறது. இருந்தபோதும், இவ்வுலகம் முழுமையாக சீரடையவில்லை ஏன்? ஏதோ பயங்கரமான தவறு எங்கேயோ நடந்துள்ளது. எனவேதான் நாம் காணும் உலகம் நன்மையானதல்ல. இரத்தக்கறை நிறைந்த வரலாறுகளால் நிறைந்திருக்கின்றது. தேவனாகிய கர்த்தரால் படைக்கப்பட்ட ஏதேனில் அழகும் அமைதியும் இன்று காணக்கிடைக்காமல் மாறின. அப்படியானால் இந்த உலகத்தில் நடந்தது என்ன?

ஆதியாகமம் என்ற ஆரம்ப நூலை படித்துப் பாருங்கள். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் நாம் உண்டாக்கின. எல்லாவற்றையும் பார்த்தார் (ஆதி.1:31) படைப்பு யாவும் மிக நன்றாயிருந்தது. எனவே தேவனுடைய படைப்பில், எந்த கோளாரும் இல்லை. எல்லாம் நன்றாகவே இருந்தது. அப்படியாயின் நாம் காணும் இந்த உலகம் இவ்வளவு கொடுமை நிறைந்ததாக ஏன் மாறிவிட்டது? தவறு எங்கே நடந்தது?

–தொடரும்

நாம் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளுவதற்கு இது இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது என நாம் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு. பழைய ஏற்பாடு என்பது இஸ்ரவேல் தேசத்துக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய செய்தியாயிருந்தது. மோசே, "நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்படிக்கை பண்ணினார் அந்த உடன்படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார்" (உபா.5:2,3) என்றான். ரோமர் 3:19. புதிய ஏற்பாடு என்பது இன்று இருக்கிற ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய செய்தியாகயிருக்கிறது. இது இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி, இல்லாவிட்டால் சுவிசேஷம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பவுல், "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன், முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோம.1:16) என்று எழுதினார்.

ஒவ்வொருவரும் இயேசுவை தேவனுடைய குமாரரென்று விசுவாசித்து அவர்களுக்கு இரட்சிப்புக்கென்று அவரில் நம்பிக்கையாயிருப்பது என்பதே சுவிசேஷத்தின் செய்தியாகும்.

பேதுரு, "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்.4:12).

மனிதனுடைய இரட்சிப்பும் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனுக்க மகிமையும் உண்டாக வேண்டுமென்பதே வேதாகமத்தின் நோக்கமாகும். தேவன், "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1தீமோ.2;4).




*Contact: 94435 58041*

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**


## நடப்புச் செய்திகள்

✦ **தமிழகத்தில் மாவட்டம் முழுவதும் போலீஸ் பணிக்கு 30 ஆயிரம் விண்ணப்பங்கள் விற்று தீர்ந்துள்ளன.**

✦ **ரொக்க நடைமுறையை கைவிட்டு, மின்னணு பணப் பரிவர்த்தனைக்கு மாற அனைத்து துறைகள் சார்ந்த ஏற்றுமதி மேம்பாட்டு குழுக்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.**

✦ **மாவட்ட அளவில் அரசு அலுவலர்களுக்கு விளையாட்டு போட்டி நடந்தது. டென்னிஸ் ஒற்றையர் மற்றும் இரட்டையர் பிரிவில் திண்டுக்கல் கலெக்டர் அவர்கள் முதல் பரிசு பெற்றார்.**



ராஜசமுகத்திற்கு தெரியப்படுத்தி அதை தடுத்திநிறுத்தினாள். அந்நாட்களிலே நூற்றி இருபத்தேழு நாடுகளிலே இருந்த யூதர்கள் காக்கப்பட்டார்கள். எஸ்தரைப்போல தேவனுடைய ஜனங்கள் காக்கப்பட நீங்கள் போராடியதுண்டா? என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நாம் எப்படிப்பார்க்கக்கூடும் என்றாள். இன்றைய நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாமும் தேவனுடைய ஜனங்களை நேசிக்கவும், அவர்களுக்காக குரல்கொடுக்கவும், நம்மை தூண்டுவதாக இச்செய்தி இருக்கிறதல்லவா, மேலும் அவள் ராஜசமுகத்தில் அவர் அழைத்தால் ஒழிய ஒருவரும் உள்ளே போகக்கூடாது என்ற உத்தரவு இருந்தபோதிலும் நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லி துணிந்து ராஜசமுகத்திற்கு சென்றாள். அவளுடைய துணிவு தன் ஜனத்தை எவ்வளவாய் நேசித்திருக்கிறாள் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இன்றைக்கு நாம் வாழ்ந்தால்போதும். நாம், நம்முடைய குடும்பம் என்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தேவனுடைய ஜனங்களைப் பற்றி அக்கறை கொள்வதில்லை. அன்பானவர்களே, தேவன் தம்முடைய ஜனத்தை நேசிக்கிறார். அதைப்போல அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அவருடைய ஜனங்களை நேசிக்கிறதை நாம் காண்கிறோம். அப்படியிருக்கிறபடியால் நாமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை நேசிக்கவும், அவர்களுக்கு உதவிடவும் வேண்டும். அதை இன்றே உங்களுடைய வாழ்க்கையில் துவங்குங்கள்.

நெகேமியா என்ற தேவ மனிதனைப் பற்றி நாம் வேதாகமத்தில்படிக்கிறோம். அவன் தன்னுடைய ஜனத்தை மிகவும் நேசித்து அவர்களை விசாரித்தான். "என் சகோதரரில் ஒருவனாகிய அனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்துதப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன்" என்கிறான் (நெகே.1:2). தேவனுடைய ஜனத்தை விசாரிக்கும் பழக்கம் உங்களிடம் இருக்கிறதா? அவர்கள் எப்படிப்போனால் எனக்கென்ன என்று சொல்லுகிறீர்களா? இயேசு சொல்லும்போது; "பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப்போஜனங் கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்" (மத்.25:42,43). மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இந்த விஷயத்தில் நெகேமியா தன் ஜனத்தை குறிப்பாக சிறையிருப்பில் மீந்துதப்பின யூதரின் செய்தியையும் எருசலேமின் நிலைமையையும் விசாரித்தான். நாம் சபையாக கூடிவருகிறோம். ஒரு வாரம் வராத சகோதரனையோ, சகோதரியையோ விசாரிக்க தவறிவிடுகிறோம். ஏன் அவர்கள் வரவில்லை? அவர்களுக்கு என்னவாயிற்று, சுகமில்லாமல் போனார்களா? அல்லது ஏதாவது பிரச்சனையா? என்று மற்றவர்களிடம் விசாரிப்பதில்லை. நாம் ஆவிக்குரிய விஷயத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்று சொன்னால் குறிப்பாக நம் ஜனங்களை விசாரிக்க கற்றுக்கொள்ளவேண்டும். நம் ஜனம் என்று சொல்லும்போது உறவினர்கள் அல்ல. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே நம் ஜனங்கள் அவர்களை விசாரிக்க மறவாதிருங்கள்.

மேலும், இந்த நெகேமியா ஜெபிக்கும்போது, "உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும்பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும்

இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்'' என்றான் (நெகே.1:6). நீங்கள் என்றாவது இந்த நெகேமியாவைப்போல உங்களுடைய ஜனங்களுக்காகவும், நீங்கள் தேவனுக்கு விரோதமாக செய்த பாவங்களை அறிக்கை செய்து ஜெபித்ததுண்டா? தன் ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக தேவனை நோக்கி மன்றாடினான். நெகேமியாவின் உயர்வான எண்ணத்தைப் பார்த்தீர்களா? இந்தவிதமான சிந்தையில் நாமும் வளர்சியடையவேண்டும். அதுமட்டுமல்ல எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும் கண்டு அவைகளை திரும்ப கட்டினான். என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்து, வாருங்கள் எழுந்து கட்டுவோம் என்று சொல்லும்போது அந்த நல்ல வேலைக்கு தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள். நெகேமியாவின் முயற்சியினால் அலங்கங்கள் கட்டப்பட்டது. அன்பானவர்களே, இங்கே நெகேமியா மூன்று காரியங்களில் கர்த்தருடைய மக்களை நேசித்திருக்கிறான். முதலாவது அவர்களை விசாரித்தான். இரண்டாவது அவர்களுக்காக ஜெபித்தான். மூன்றாவது அவர்களை அழைத்து பொல்லாதவர்கள் அக்கினியால் அழித்துப்போட்ட எருசலேமின் அலங்கங்களைக் கட்டினான். இன்றைக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நாம் அறிவோம். கர்த்தருடைய பிள்ளைகள் எந்த விதமான சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அறிவோம். நாம் இந்த நெகேமியாவைப்போல ஜெபிக்கவும், அவர்களை விசாரிக்கவும், அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய ராஜ்யத்தை கட்டவும் செயல்படுவோமானால், நெகேமியாவைப்போல தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

**நாம் செய்யவேண்டியதென்ன?**

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்'' (கலா.6:10). நாம் பொதுவாக உலகத்தில் உள்ள எல்லோரையுமே நேசிக்கக் கற்றுக்கொள்ளவோண்டும். யாரும் நமக்கு வேண்டாதவர்கள் இல்லை. ஆனால் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மைசெய்ய பழகவேண்டும். கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான் என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது. ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசகுடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம். அப்படிச்செய்யும்போது யோவேலில் சொல்லப்பட்டபடி நாம் வெட்கப்பட்டுப்போவதில்லை. "நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை'' (யோவேல் 2:26,27). தேவனுடைய ஜனங்களை நேசித்து, அவர்களுக்கு நன்மைசெய்ய நாடுங்கள். அப்பொழுது கர்த்தருடைய வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்தும். உங்களுக்காகவும் உங்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.


'ஒரே வழி' வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**




## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends - TVOT

### தேவன் நம் நண்பர்களிடம் பேசுகிறார்
### God speake to our friends
பாடம் -1

**மனப்பாட வசனம்:**

எபிரெயர் 1:1-2 "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்"

**முன்னுரை:**

நமது கலாச்சாரம் எல்லா நேரங்களிலும் கடவுளைப் பற்றி பேசுகிறது. உங்களுடைய நண்பர்கள் எப்போதாவது கடவுளைப் பற்றி பேசியிருக்கிறார்களா? நம்முடைய சமுதாயத்தில் அநேக ஜனங்கள் இன்று கடவுள் மேல் நம்பிக்கை கொள்கின்றனர். உங்களுடைய நண்பர்கள் கடவுளை நம்புகின்றனரா? தேவன் அவர்களை நேசிக்கிறார் என்பதை அவர்கள் அறிவார்களா? அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து விடுவிக்கப்படவேண்டும். இரட்சிக்கப்படவேண்டுமென்பது அவசியம் என அறிவார்களா? அப்படியானால், உங்களுடைய நண்பர்கள் இதைக்குறித்து என்ன சொல்லுகிறார்கள், இரட்சிக்கப்பட அவர்கள் என்ன செய்தார்கள்?

அநேகர் வேதாகமத்திலிருந்து வருகிறதான இரட்சிப்பைக் குறித்தில்லாத கருத்துக்களை உடையவர்களாக இருக்கின்றனர். உங்களுடைய நண்பர்கள் தேவனைப் பற்றி அறியாதவர்களாக அல்லது தேவனிடத்தில் நம்பிக்கையில்லாதவர்களாக இருந்தால், தேவன் தம்வார்த்தையின் மூலம் அவர்களிடம் பேசுகிறார் என்பதை அவர்கள் அறிந்து கொள்வதற்கு இதுவே சரியான தருணம். ஒவ்வொருவரும் தேவனைக் குறித்து பல விதமான நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர், தேவன் இல்லை என சொல்லுகிறவர்களும் கூட தான். நீங்கள் உங்கள் நண்பர்களுடன் எதைக்குறித்துப் பேசுவீர்கள். ஏன் தேவனைக் குறித்து அவர்களிடம் பேசுவதில்லை?

**வேதம் என்ன சொல்லுகிறது?**

தேவன் உண்மையுள்ளவர். அவர் எல்லா ஜனத்துக்கும் ஒரு செய்தி வைத்திருக்கிறார்.

"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது" (1யோவா.1:5).

இன்று மனிதனுக்கு தம்முடைய வார்த்தைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். நாம் வேதாகமத்தை சரியாக பயன்படுத்துகிறோம் என்பதற்கு இது மிக முக்கியமாயிருக்கிறது.

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாகவும் நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2தீமோ.2:15).

# கர்த்தருடைய ஜெபம்

-G.King Solomom

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவரே,**

கர்த்தருடைய ஜெபம் என்றால் நம்மில் பலருக்கும் நினைவில் வருவது மத்தேயு 6-ம் அதிகாரத்தில் உள்ள கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு கற்பித்த ஜெபமாகும். ஆனால் அது கர்த்தருடைய ஜெபம் அல்ல. கர்த்தராகிய கிறிஸ்து அநேக வேளைகளில் ஜெபித்துள்ளார். அவைகள் ஒவ்வொன்றும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவைகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஜெபத்தை கிறிஸ்து தம்முடைய சீஷர்களுக்காகவும், சீஷர்களின் வார்த்தையினால் தம்மை விசுவாசிக்கின்ற யாவருக்காகவும் செய்தார். இந்த சம்பவத்தை யோவான் தன்னுடைய சுவிசேஷக புத்தகத்தில் 17-ம் அதிகாரத்தில் பதிவு செய்துள்ளார்.

இந்த 17-ம் அதிகாரம் முழுவதும் தாம் எதிர்கொள்ள போகும் சிலுவை மரணத்திற்கு முன்பாக, கிறிஸ்து பிதாவாகிய தேவனோடு செய்த நீண்ட ஜெபமாகும். இதில் என்னை மிகவும் தொட்ட வசனபகுதி.

"நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கு, நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:20-23).

கிறிஸ்து தேவனுக்குள் ஒன்றாயிருப்பதுபோல் கிறிஸ்துவை விசுவாசிக்கின்ற நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்க வேண்டுமென்று வியர்வை இரத்தத்துளிகளாய் சிந்தி ஜெபித்தார்.

ஆனால் இன்று கிறிஸ்தவர்கள் சபையின் பெயராலும் உபதேசக்கோட்பாடுகளாலும், பொருளாதார ஏற்றதாழ்வுகளாலும், ஜாதி பிரிவினாலும், மொழியினாலும் இதுபோன்ற இன்னும் பல பிரிவினைகளாலும் பிரிந்து இருப்பது மிகவும் வேதனையான காரியம்.

கிறிஸ்து விரும்பிய இந்த ஒருமைப்பாட்டிற்குள் வராமல், பல விதமான குழுக்களாக பிரிந்திருக்க பல காரணங்களை நாம் கூறினாலும், இது கிறிஸ்துவின் உபதேசத்திற்கு விரோதமானது என்பதை நாம் உணரவேண்டும். அனைத்து கிறிஸ்தவர்களும் ஒற்றுமையின் அவசியத்திற்கான காரணங்களை அறிந்துகொள்ள மிக சிறப்பாக சுட்டிக் காட்டுகிறார் கிறிஸ்து அவை...

1. பிதாவாகிய தேவன் கிறிஸ்துவை அனுப்பினார் என்று உலகம் அறிய வேண்டுமானால், நாம் நமக்குள் ஒற்றுமையாக இருப்பது அவசியம் (வச. 21).

2. பிதாவாகிய தேவனும் குமாரனாகிய கிறிஸ்துவும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதற்கு கிறிஸ்துவர்களாகிய நமது ஒற்றுமையே மிகப் பெரிய சாட்சியம் (வச.21).

3. ஒருமைப்பாட்டில் நாம் தேறினவர்களாயிருக்கும்போது, பிதாவாகிய தேவன் குமாரனாகிய கிறிஸ்துவில் கொண்டுள்ள அன்பு வெளிப்படையாய் காணும் (வச.23)

அன்பானவர்களே, கிறிஸ்து வியர்வை இரத்தத்துளிகளாய் சிந்தி ஜெபித்த ஜெபத்திற்கு நாம் எந்த வகையில் பொறுப்பேற்றுள்ளோம்? நீங்களெல்லாரும் ஒரு மனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்க முள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல் அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்கள் என்று அறிந்து, ஆசீர்வதியுங்கள் (1பேது.3;7,8).

நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன் கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக! (ரோம.15:5).

- அடுத்த இதழில் வேறொரு செய்தியில் உங்களைச் சந்திக்கிறேன்

அன்புடன்

ஜி.கிங் சாலமோன்



## வேத அறிவுப்போட்டி 196-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. ஆம் | - எண்.9:14 |
| 2. சிறுபெண்ணே எழுந்திரு | - மாற்.5:41 |
| 3. ஞானிகளின், நீதிமான்களின் | - உபா.16:19 |
| 4. சீமோனுடைய மாமியினிடத்தில் | - லூக்.4:39 |
| 5. யோசுவாவை | - யோசு.5:15 |
| 6. பிலாத்து | - யோவா.18:35 |
| 7. யாகேல் | - நியா.5:24 |
| 8. பவுல் | - அப்.23:5 |
| 9. எலிமெலேக்கின், போவாஸை | - ரூத் 4:8 |
| 10. நியாயப்பிரமாணம் | - ரோம.7:16 |

## வேத அறிவுப்போட்டி 197-ன் விடைகள்

| | |
|---|---|
| 1.சவுல் | - 1சாமு.9:24 |
| 2. ஆம் | - 1கொ.15:6 |
| 3. தாவீது | - 2சாமு.22:27 |
| 4. பவுல் | - 2கொ.13:10 |
| 5. சாலமோன் | - 1இரா10:27 |
| 6. இல்லை | - கலா.3:12 |
| 7. யேசபேல் | - 2இரா.9:30 |
| 8. ஆம் | - எபே.3:18 |
| 9. செருயாவின் குமாரன் யோவாப் | - 1நாளா.27:24 |
| 10. பவுல் | - பிலி.3:5 |

## வேத அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.R.சுசீலா ராஜசிங் | -தளபதிசமுத்திரம் |
| 2.Mrs.தேவதா தேவபிரியம் | - சென்னை |
| 3.Mrs.பொன்னிவிக்டர் | - தாராபுரம் |
| 4.Mrs.ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் |
| 5.Mrs.சொர்ணமணிதாமஸ் | -பரமன்குறிச்சி |
| 6.R.அனிதாநெகேமியா | - ரெட்டியார்பட்டி |
| 7.E.ஜாய் ஹெலன் புனிதா | - சென்னை |
| 8.Mrs.ஜெபக்கனி | - சங்கரன்கோவில் |
| 9.J.விக்டர் சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 10.Mrs.கெத்சிசெல்வின் | - சென்னை |
| 11.Mrs.சாந்தா பழநி | - தருமபுரி |
| 12.Mrs.ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 13.Mrs.ஃபிரங்கலினாஜான் | - ஊட்டி |
| 14.Mrs.லங்காஜீவரத்தினம் | - சிவகாசி |
| 15.J.S.ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 16.Mrs.தேவி ராஜசிங் | - திருப்பூர் |
| 17.S.அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 18.Sis.ராஜம்மாள் | - தூத்துக்குடி |
| 19.R.அஜீத்குமார் | - கோவை |
| 20.Mrs.ஜோதிமணிஅப்பாதுரை | - வில்லிப்புத்தூர் |
| 21.Mrs.மேரி நிர்மலா | - மதுரை |
| 22.S.R.பெரியசாமி | - சேளூர் |
| 23.Mrs.ருக்மணிஜெயசீலன் | - தேனி |
| 24.Mrs.ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 25.Mrs.அல்லிராணி காட்வின் | - சென்னை |
| 26.Mrs.இளவரசிஜோபிதா சுந்தரராஜன் | - கோவை |
| 27.G.ஆன்டனிதாஸ் | -பரமக்குடி |
| 28.M.இராமச்சந்திரன் | - தூத்துக்குடி |
| 29.R.கஸ்தூரி | - தூத்துக்குடி |
| 30.K.மோகன் | - குமாரபாளையம் |
| 31.Mrs.ஜெபா நியூட்டன் | - திருநெல்வேலி |
| 32.K.ராணி | - தூத்துக்குடி |
| 33.P.எஸ்தர் குளோரி | - திருவண்ணாமலை |
| 34.S.ரூபி ஜெயா | - கலங்கவிலை |
| 35.B.ஸ்டெல்லாம்மா | - கூத்தூர் |
| 36.T.ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 37.Mrs.சைலா அலெக்ஸ் | - கன்னியாகுமரி |
| 38.K.ரத்னாபாய் பிரசாத் | - மதுரை |
| 39.Mrs.ஜாய்மேத்யு | - வி.கே.புரம் |

தொடர்ச்சி 13-ம் பக்கம்

## வேத அறிவுப்போட்டியில் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1.Mrs.பாலின் மார்ட்டின் | - காரைக்குடி |
| 2.T.ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 3.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 4.Mrs.ஜெபா நியூட்டன் | - திருநெல்வேலி |
| 5.V.C.ரூபவல்யா | - தூத்துக்குடி |
| 6.S.சாந்தகுமாரி | - நாசரேத் |
| 7.Mrs.அன்புகமலம் | - காரைக்குடி |
| 8.B.ஞானதீபம் | - இடையான்குடி |
| 9.Tmt.மரகதம்திரவியம் | - கோம்பை |
| 10.S.ஜாய் சந்திரா | - நெல்லூர் |
| 11.E.அதிசயம் | - பனைகுடி |
| 12.J.ஆலிவ் | - கோவை |
| 13.Mrs.ஃபிரங்கலினாஜான் | - ஊட்டி |
| 14.S.ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 15.A.கிரேஸ்ஜெயந்தி | - குமாரபாளையம் |
| 16.Mrs.பாக்கியதாய் செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 17.S.சிம்சோன் | - கே.சி.புதூர் |
| 18.M.செம்புலிங்கம் | - தூத்துக்குடி |
| 19.Mrs.தேவபுஸ்பம் | - நாசரேத் |
| 20.S.M.தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 21.Mrs.அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 22.Mrs.மேரி நிர்மலா | -மதுரை |
| 23.Sis.ஃபுளோரா சுந்தர் | - மதுரை |
| 24.Mrs.ரூபி ஜெபராஜ் | - மதுரை |
| 25.R.அந்தோனியம்மாள் | - தூத்துக்குடி |
| 26.A.ஜெபக்கனி | - சங்கரன்கோவில் |
| 27.A.மங்களம் | - தூத்துக்குடி |
| 28.Sis.ஆலிஸ்குணசீலி | - வைகுண்டம் |
| 29.k.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 30.R.கிரேஸ்சங்கீதா | - தூத்துக்குடி |
| 31.Mrs.ஜோதிமணி அப்பாத்துரை | - வில்லிப்புத்தூர் |
| 32.Mrs.லங்காஜீவரத்தினம் | - சிவகாசி |
| 33.Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி | - திருச்சி |
| 34.Mrs.சுசிலாராஜசிங் | -தலபதிசமுத்திரம் |
| 35.Mrs.கிறிஸ்டோபர்சாலமோன் | - கோவை |
| 36.K.ராணி | - தூத்துக்குடி |
| 37.Mrs.நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 38.Mrs.சொர்ணமணிதாமஸ் | - கஸ்பா |
| 39.A.ரெபேக்காள் | - மதுரை |

தொடர்ச்சி 13-ம் பக்கம்

## நாம் ஏன் மனசாட்சியை ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக ஏற்றுக்கொள்வதில்லை

*J.C.Choate*

## Why We do not Accept The Conscience As A Safe Guide

மனசாட்சி என்ற வார்த்தையானது மனிதனுடைய இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும் கிரியை செய்யக்கூடியதாகும். இதன் பொருள், காரியங்கள் சரியானதா அல்லது தவறானதா என்று தீர்மானிக்கும்படிக்கு மற்றவைகளோடு ஒப்பிட்டு பார்க்க உதவுகின்ற தகவல் மற்றும் அறிவு போன்றவற்றின் ஒரு குறிப்பிட்ட முடிவினை ஒருவன் சேகரித்திருக்கின்றதாகும். ஒருவேளை அந்த தகவல், சரியானவைகளைச் சார்ந்த அல்லது தவறானவற்றைச் சார்ந்த அறிக்கைகளாக இருக்கலாம். இது சரியா அல்லது தவறா என்ற அக்கரையில்லாமல், இது சரியானதாக ஒத்துக்கொள்ளப்பட்டு பிறகு ஒரு வழிகாட்டியாக பயன்படுத்தப்படலாம். மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக செயல்படுகிறது என நினைக்கின்றவர்கள் இருக்கின்றனர். மற்றவர்கள் நல்மனசாட்சியை கொண்டிருப்பதைக் குறித்து பேசுகின்றனர், மேலும் அவர்கள் நல்மனசாட்சியுடையவர்களாயிருப்பதினால், இது தன்னில் தானே சரியானவற்றை உருவாக்குகிறது என நினைக்கின்றனர். இருப்பினும், ஆனால் ஒருவன் தான் சத்தியத்தைப் பெற்றுவிட்டதாகவும், நினைத்துக்கொண்டிருக் கிறவனாக வஞ்சிக்கப்பட்டவனாயிருக்கலாம். இவனுடைய நல்மனசாட்சி பிறகு சத்தியத்தின் மீது அடித்தளமிடாமல் தவறானவற்றின் மீது அடித்தளமிட்டதாக இருக்கிறது. ஆகவே தான் ஒன்றினை சரியா அல்லது தவறா என்று தீர்மானிப்பதற்கு தன்னுடைய மனசாட்சியை முடிவான பிரதானமாக செயல்பட அனுமதிக்கக்கூடாது.

மனசாட்சி எவ்வாறு செயல்படுகிறது என மேலும் விளக்கமளிக்க, ஒரு சிறு பிள்ளையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள் அந்த சிறு பிள்ளையாண்டான் தன்னுடைய பெற்றோர்களால் திருடுவது தவறானது அல்லது தனக்குரியதல்லாத ஒன்றினை எடுத்துக்கொள்வது தவறானது என போதிக்கப்படுகிறான். அவன் தன்னுடைய பெற்றோர்களிடம் இருக்கும் காலமெல்லாம் தொடந்து இவ்வாறு போதிக்கப்படுகிறான். ஏனென்றால் அவன் தன்னுடைய பெற்றோர்களை கனப்படுத்துகிறான். இதனையே மற்ற நேர்மையான பெற்றோர்கள் போதிக்கின்றனர், கட்டளையும் இதனையே கூறுகிறது, உண்மையுள்ளவனாயிருக்கும்படி அவன் இதை ஏற்றுக்கொண்டு வளருகிறான். ஆனால் ஒரு நாள் தான் வைத்துக்கொள்ள விரும்பின ஒன்றை நண்பனுடைய வீட்டில் அவன் காண்கிறான் என நினைத்துக்கொள்ளுங்கள் அவன் தன்னுடையதல்லாத ஒன்றை எடுத்துக்கொள்வதற்கு சோதிக்கப்பட்டு அதை எடுத்துக்கொள்கிறான். ஏனென்றால் அவன் தான் போதிக்கப்பட்டவற்றிற்கு விரோதமாக செயல்பட்டு கொண்டிருக்கிறான், அவனுடைய மனசாட்சி அவனை கஷ்டப்படுத்துகிறது. இறுதியாக அவன் தான் எடுத்துக்கொண்ட அந்தப்பொருளை திருப்பிக்கொடுத்துவிட கட்டாயப்படுத்தபடுவதாக உணருகிறான். ஆனால் இதே காரியம் தவறாகப் போதிக்கப்பட்டிருக்கிறவனுக்கும் சொல்லப்பட்டிருக்கலாம். இருந்தபோதிலும், இது தவறு அல்லது ஏதோ பிழை. உண்மையாயிருக்க போதிக்கப்பட்டிருக்குமானால், பிறகு இது உண்மையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது, ஒருவன் சத்தியமுள்ளவனாயிருப்பதற்கு எப்படிப் போதிக்கப்பட்டிருக்கிறானோ அவற்றிற்கு எதிராக அவன் செயல்பட்டால், அவனுடைய மனசாட்சி அவனை கஷ்டப்படுத்துகிறது.

பின்பு, ஒருவனுடைய மனசாட்சி நம்பத்தகுந்ததாயிருக்க வேண்டுமானால் அது சத்தியத்தின் அடிப்படையில் இருக்கவேண்டும். வேறுவிதமாக சொல்வோமானால், சத்தியம்



3. எபி.1:5-ல் குறிப்பிட்டிருக்கிறபடி உலகத்திலே ------------- ஆக பிறந்தார்.

4. தேவன் தம்முடைய குமாரனை ஸ்திரீயினிடத்தில் பிறந்தவராக என்ன செய்யும்படி அனுப்பினார்? (கலா.4:4,5)

5. தேவன் தம்முடைய குமாரனுடைய வருகைக்காக பூமிக்குரிய உலகத்தை எவ்வாறு ஆயத்தம் செய்தார்?

6. மீகா தீர்க்கதரிசியானவர் ---------------- நூறு ஆண்டுகளுக்கு முன்பே கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பார் என்று சொன்னார்.

7. தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒருவர் இயேசு என்பதை மதத்தலைவர்கள் ஏற்றுக்கொண்டார்களா?

8. ஜனங்களை சம்மதிக்கப் பண்ணும்படி இயேசு பல அடையாளங்களை நடப்பித்தார், அவர் தேவனிடத்திலிருந்து வந்தார் என்பதை மதத்தலைவர்கள் ஒத்துக்கொண்டார்களா?

9. ஏசாயா சொல்லியிருந்தார் "கர்த்தரோ----------------- அவர் (இயேசு) மேல் விழப்பண்ணினார்.

10. இயேசுவானவர் எந்த -------------- செய்யவில்லை அவர் வாயில் ----------------- இருந்ததுமில்லை என்ற போதிலும் சிலுவையில் அறையப்பட்டார். அவர் குற்ற மற்றவராகவும், பாவமில்லாதவராகவும் இருந்தார்.

11. இயேசுவுடனே கூட சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளி அவரிடத்தில் என்ன செய்யும்படி கேட்டுக் கொண்டான்?

12. இயேசுவின் சிலுவை மரணத்தின் வேதனையை விவரிக்கும் தீர்க்கதரிசனத்தை கொண்ட சங்.22-ல் பயன்படுத்தப்பட்டிருக்கும் சில வார்த்தைகள் என்ன?

13. இயேசு சிலுவையில் அறையப்பட்டதை கண்ட சாட்சி என்ன சொன்னார்?

14. இயேசவின் உடைகளுக்கு என்ன சம்பவித்தது?

15. இயேசுவின் மரணம், அடக்கத்திற்கு பின்பு அவருடைய சரீரத்துக்கு என்ன சம்பவித்தது?

### பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவில் பாபா அணு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
   அ) கொல்கத்தா ஆ) டெல்லி இ) மும்பை
2. ரிக்டர் அளவுகோல் எதை கணக்கிட பயன்படுகிறது?
   அ) காற்றின் அழுத்தம் ஆ) நிலநடுக்கத்தின் அதிர்வுஅளவு இ) காற்றின் அழுத்தம்
3. எந்த பருவத்தில் வாயு மண்டலத்தில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும்?
   அ) பருவக்காற்றுக்காலம் ஆ) இலையுதிர்காலம் இ) மழைக்காலம்
4. இந்தியாவில் உடன் கட்டை ஏறும் பழக்கத்தை தடுக்க சட்டம்கொண்டு வந்தவர் யார்?
   அ) வில்லியம்பென்டிங்பிரபு ஆ) சர்சன்பிரபு இ) இர்வின்பிரபு
5. ஆகாயவிமானம் எந்திரப்படகுகளின் வேகத்தை கண்டுபிடிக்க உபயோகிக்கப்படும் கருவிஎது? அ) ஸ்பீடோமீட்டர் ஆ) ஒடோ மீட்டர் இ) டாக்கோமீட்டர்

**விடைகள்:**

1. மும்பை 2. நிலநடுக்கத்தின் அதிர்வு அளவு 3. பருவக்காற்றுகாலம்
4. வில்லியம்பென்டிங்பிரபு 5. டாக்கோமீட்டர்

தெரிந்து கொள்வோம்

### ▶ விடுதலை முழக்கம்: துணுக்குகள்

K.R.K.Ravi Asir, Associate Editor

விடுதலைப் போரில் தடியடி பட்டுத் தன்னுயிர் நீத்த தியாகி தாதாபாய் நவ்ரோஜி, 'சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்' என்று முழங்கினார். லோக்மானியபாலகங்காதர திலகர், 'அன்பே எனது வழி' அறிவே எனது ஆயுதம், அடிமை என் வாழ்க்கையில் இல்லை என்று குரல் கொடுத்தார் "அடிமையாய் வாழ்வதை விட செத்து மடிவதே மேல்" என்று கர்ஜித்தார் கோபால கிருஷ்ணகோகலே.

பெண்கள் பகுதி

# இரட்சகர் - Saviour

*-Betty*




அவருடைய உயிர்த்தெழுதல்:

"என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக்காணவொட்டீர்" (சங்.16:11)

**நிறைவேற்றம்:**

"ஆண்டவனே அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது; மூன்று நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது" (மத்.27:63).

"அவர் இங்கே இல்லை; தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்த ரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் " (மத்.28:6).

**அவர் தேவனிடமாய் திரும்புதல்:**

"இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக்கொண்டிருக்கையில் இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" (தானி.7:13-14).

**நிறைவேற்றம்:**

"இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது" (அப்.1:9).

ஒரு சில நிமிடங்கள் நாம் வாசித்திருக்கிற கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனங்களை சிந்தனை செய்யுங்கள். எத்தனை வருஷ சம்பவங்களின்மேல் அவர் கட்டுப்பாடு உடையவராக இருந்தார்? அவர் தான் பிறக்கும் இடத்தை தேர்வு செய்யக் கூடியவராக இருந்தாரா அல்லது ஏரோதுவை கொண்டு கொலைகார போர்ச்சேவர்களை பெத்லகேமுக்கு அனுப்புவதற்கு காரணமாயிருந்தாரா? அதன்பின் பாதுகாப்பாக எகிப்துக்கு ஓடிப்போகும்படி விருப்பமுடையவராக இருந்தாரா? தன்னுடைய இளம்வயதில் ஒரு நீதியுள்ள போதகராக சுதந்திரமாக ஆளுகை செய்கிறவர்களின் பகைமையை எழுப்பி விடவில்லை. தாம் காட்டிக் கொடுக்கப்படும்படி ஆசாரியர்கள் யூதாசுக்கு முப்பது வெள்ளிக்காசுகள் கொடுப்பதற்கு அவர் காரணமாயிருக்கவில்லை அவருடைய வேதனை, பாடுகள்,மரணம் இவை பற்றிய விவரங்கள் அவரால் முன்னேற்பாடு செய்யப்படவில்லை. அவர் தம்முடைய மரணத்துக்கு பின் ஐசுவரியவானாயிருந்த யோசேப்பு தம்மை அவனுடைய சொந்த கல்லறையில் அடக்கம் செய்யும் படியாக தம்முடைய செல்வாக்கை பயன் படுத்தவில்லை.

ஆனால் இவைகள் ஒவ்வொன்றும் சம்பவித்தன. அந்த சம்பவங்கள் நடப்பதற்கு பலநூறு வருஷங்களுக்கு முன்பு வேதாகமத்தில் எவ்வாறு விவரிக்கப்பட்டு இருந்தனவோ அவ்வண்ணமாகவே மிக சரியாக நடந்தேறின. எந்த ஒரு சாதாரண மனிதனும், கிறிஸ்துவின் ஜீவியத்தில் மெய்யாகவே நடந்த இந்த சம்பவங்களை கட்டுப் படுத்தியிருக்கமுடியாது என்று பொதுவான அறிவு சொல்கிறது. தேவனுடைய முன்னறிவின் மூலமாக மாத்திரமே தீர்க்கதரிசனங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன, இயேசுவானவர் பூமியிலிருந்த பொழுது மனுஷர் இயேசுவுக்கு இவ்வாறு செய்வார்கள் என்பதை தேவன் பல நூற்றாண்டுகளாக உற்று நோக்கிக் கொண்டிருந்தார். எந்த ஒரு மனுஷனும் இயேசு கிறிஸ்துவானவர் உலகத்தின் பாவங்களுக்காக மரித்து தேவகுமாரனாகவும், இரட்சகராகவும் இருக்கிறார் என்பதை வெற்றிகரமாக மறுதலிக்க முடியாது.

கேள்விகள்

1. ஆதியிலே இருந்தது யார்? அவர் ------------ -------------------- அவர்------ -------- ------------ அவர்------------- -------------------

2. சகலமும் அவர்மூலமாய் (வார்த்தை, தேவத்துவத்தில் ஒரு நபர்) சகலமும் ----- ------- ---------



அதாவது, தேவனுடைய வார்த்தை மனசாட்சியை ஆளுகை செய்யவேண்டும். ஒருவனுடைய மனசாட்சி வஞ்சகத்தாலும் அல்லது தவறானவற்றினாலும் அஸ்திபாரம் போடப்பட்டிருக்குமானால், அந்த மனசாட்சி ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக கருதப்படமுடியாது.

நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகையில், நாம் பேசிக்கொண்டிருக்கிறவற்றிற்கு சவுல் ஒரு சிறந்த மாதிரி என்பதைக் காணலாம். முதலாவதாக, சவுல் ஒரு யூதன் என்பதையும், அவன் யூத சமயத்தைப் பின்பற்றினவன் என்பதையும், தன்னுடைய சமயத்திற்காக மிகுந்த வைராக்கியங் கொண்டவன் என்பதையும், மேலும் கிறிஸ்தவம் அவனுடைய சமயத்தின் விரோதியாய் இருந்தது என நினைத்தான் என்பதையும் சிந்தியுங்கள் இதன் விளைவாக, அவன் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும் பொருட்டுச் சென்றான். நாம் அவனைக் குறித்து இவ்விதமாக வாசிக்கிறோம்: "சவுல் வீடுகள் தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்" (அப்.8:3). தொடர்ந்து நாம், "சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டு பிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி தமஸ்குவிலுள்ள ஜெபஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்" (அப்.9:1,2) என வாசிக்கிறோம். இச் சம்பவம் தொடர்கையில், கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகும்போது சவுலும் அவனுடைய கூட்டாளிகளும் தமஸ்குவுக்குப் பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தனர். பிறகு, "அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக்கேட்டான். அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர்; நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர். நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்" (அப்.9:4-6) என நாம்வாசிக்கிறோம். அனனியா என்னும் பேருள்ள ஒரு சுவிசேஷப் பிரசங்கி எவ்வாறு அவனிடத்தில் வந்து, எழுந்து அவனுடைய பாவங்கள் கழுவப்படும் பொருட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டுமென்று அவன் சொல்லுகிறதையும் வேதவாக்கியம் தொடர்ந்து குறிப்பிடுகிறது (அப்.22:16). இப்போது சவுல் என்ன செய்தான்? அவன் கிறிஸ்துவின் விசுவாசியாக மாறினான், தன்னுடைய பாவத்திற்காக மனந்திரும்பினான், கிறிஸ்துவை கர்த்தராக ஏற்றுக்கொண்டான், பிறகு அவன் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். இதைச் செய்ததும், அவன் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான் (அப்.9:20) என்று வேதம் சொல்கிறது.

இப்போது இந்த மனிதனைப்பற்றி யோசித்துப் பாருங்கள். இவன் யூத சமயத்திற்காக மிகவும் உண்மையுள்ளவனாகவும், வைராக்கியமுள்ளவனாகவும் இருந்தான். இவன் கிறிஸ்தவத்திற்கு விரோதமாக கிறிஸ்தவ புருஷர்களையும், ஸ்திரீகளையும் துன்புறுத்தினான். ஆனால் தீடீரென்று கிறிஸ்துவின் விசுவாசியாக மாறி, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தவனாக, கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான். அதுமாத்திரமல்ல, மீதமுள்ள தன்னுடைய வாழ்நாட்களை கர்த்தருக்கு ஊழியஞ்செய்து, அவருடைய சுவிசேஷத்தைப் பரப்புகிறவனாகக் கழித்தான்.

ஆனால் அவன் ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கு முன் அவனுடைய நாட்கள் எப்படியிருந்தது? அவன் தான் செய்தவற்றில் நேர்மையுள்ளவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருந்தானா? இவையெல்லாவற்றையும் அவன் ஏன் செய்தான் என்பதை அவனே விளக்குகிறதை கேட்போம். அவன், ''முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான் களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன். சகல ஜெபஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ் சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்கவெறிகொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்'' (அப்.26:9-11) என்றான்.

அந்நாட்களில் சவுல் சபையைத் துன்பப்படுத்தின போது அவன் நல் மனசாட்சியுடையவனாக இருந்திருக்கிறான் என்று இவைகளெல்லாம் கூறுகிறது. அவன் என்ன செய்து கொண்டிருந்தானோ, அவற்றில் அவன் நேர்மையுள்ளவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருந்தான். அவன் தான் செய்துகொண்டிருந்தவற்றைக் குறித்து நல்லதென்று உணர்ந்தவனாக சந்தேகங்கொள்ளாதிருந்தான். ஆனால் உண்மையென்னவென்றால், அவனுடைய மனசாட்சி தேவன் அவன் செய்யும்படி விரும்பியவற்றின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருக்கவில்லை, ஆனால் அவன் தான் சரியென்று நினைத்தவற்றின் அடிப்படையிலேயே செயல்பட்டுக் கொண்டிருந்தான். அவன் சத்தியத்தைக் கற்றுக்கொண்ட பிற்பாடே, அவன் சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்தவனாக, தேவனுக்கு உகந்தவனாக மாறினான்.

சவுலுடைய மனந்திரும்புதலுக்குப் பிறகு அவனுடைய பெயர் பவுல் என மாற்றப்பட்டது அதற்கு பிறகு அவன், '' என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவரை ஸ்தோத்திரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன். நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகிற்று. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன். நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' (1தீமோ.1:12-17) என்றான்.

முன்னதாக உள்ள வேதவாக்கியத்தில் பவுல் தேவனுக்கு முன்னே எல்லா விஷயங்களிலும் நல்மனசாட்சியோடே நடந்துவந்த நாட்கள் வரைக்கும் நினைவுப்படுத்தப்படுகிறான் என நான் நினைக்கிறேன் (அப்.23:1) மேலும் அது வரை



பவுல் விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள்? (ரோம.10:14). விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினாலேயே வருகிறது (ரோம.10:17).

5. இந்தப் பகுதியில் கூட லீதியாள் முதலில் கேட்டாள் பின்புதான் அவளுடைய இருதயம் திறக்கப்படுகிறது (அப்.6:14). கோல்வினுடைய போதனைகள் கேட்கிறதற்கு நேர் எதிரிடையாக இருக்கிறது.

6. சுவிசேஷத்தின் மூலமாய் தெசலோனிக்கேயர் அழைக்கப்பட்டார்கள். (2தெச.2:14).

கர்த்தர் எப்படி சிறைச்சாலை அதிகாரிக்குச் செய்தாரோ, பெந்தெகொஸ்தே நாளில் மக்களுக்கு செய்தாரோ, மற்றவர்களுக்கும் செய்தாரோ அப்படியே லீதியாளின் இருதயத்தையும் தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதின் மூலம் திறந்தார். ஆனால் அங்கே பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி ஏன் இருந்தார். தேவனுடைய அருளால் அங்கிருந்தார்.

லீதியாள் போதனைகளைக் கேட்க சென்றது அதை கவனிப்பதற்காக அது தன் எண்ணத்திலேயே தியானம் செய்யவும் மற்றகாரியங்களுக்காக முயற்சிக்கவுமே என்பதைக் குறிக்கிறது வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் தேவ வார்த்தையைப் பிரசங்கிப்பதின் மூலம் உண்டான விசுவாசம் அவர்கள் இருதயங்களைத் திறந்தது.

உண்மையாகவே கர்த்தருக்கு இன்று செவி சாய்க்கிறீர்களா?

1. கவனிப்பது என்பது அடிக்கடி நமக்கு பிரச்சனையான ஒன்று எத்தனை முறை ஒரு நண்பனை ஒரு பிரச்சனையைக் குறித்து பேசும்படி அழைத்திருக்கிறீர்கள். சீக்கிரமே நீங்கள் சொல்லுவதில்லை. அவர்கள் பிரச்சனைகளைச் சொல்லுவதன் மூலம் குறுக்கிடுவார்கள். இதோ தவறை நீங்கள் எத்தனை முறை செய்திருப்பீர்கள்? கவனித்துக் கேட்பதற்கு பதில் உங்கள் மனதிலுள்ளதை அல்லது அதுபோன்ற வேறொரு செய்தியைப் பேச்சாளர் பேசவேண்டுமென்று குறிக்கிட்டிருக்கிறீர்கள்.

2. உண்மையாகவே நீங்கள் இப்போது கவனிக்கிறீர்கள் அல்லது மதிப்பீடு செய்கிறீர்களா? கர்த்தரிடத்திலிருந்து ஒரு வார்த்தையைக் கேட்க முயற்சிக்கிறீர்களா? அல்லது பிரசங்கியாருக்கு மதிப்பெண் கொடுக்கிறீர்களா?

அவளுடைய இருதயம் திறக்கப்பட்டபோது, அவள் கர்த்தருக்கு சரியாகக் கீழ்ப்படிந்தாள்.

1. சத்தியத்தை எப்போது அறிந்து கொள்ளுகிறார்களோ அப்போதே உண்மையுள்ள இருதயமுள்ளவர்கள் கீழ்ப்படிவார்கள்.

2. கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசம் என்பது இரட்சிப்புக்கு ஒரு முன் தேவை.

3. பவுல் என்ன போதித்தாரோ அதை செயல்படுத்தினான். ஏனென்றால், அவன் சரியாக ஞானஸ்நானம் பெற்றான். பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது ஞானஸ்நானத்தைப் பற்றியும் பிரசங்கித்தான். இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லையென்றால் ஏன் முதல் பிரசங்கத்திலேயே இது சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்?

4. ஞானஸ்நானத்தின் மூலம் நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் (கலா.3:26,27).

5. குழந்தை ஞானஸ்நானம் பண்ணப்பட்டதா? அந்த வீட்டார் மத்தியில் ஒரே குழந்தை இருந்ததாக அனுமானமில்லை (யூகம்) பல யூகங்களின் மத்தியில் குழந்தை ஞானஸ்நானம் இருந்திருக்குமென்றால் அவளுக்கு (லீதியாளுக்கு) கட்டாயம் திருமணமாகியிருக்க வேண்டுமென்று யூகிக்கிறோம்.

அவளுக்கு சிறுபிள்ளைகள் இருந்திருக்க வேண்டுமென்று அனுமானிக்கவேண்டும்
ஆனால் அநேகமாக அவளுக்கு திருமணமாகவில்லை.


## பாடம் - 22

## லீதியாளின் இருதயம் திறக்கப்பட்டது

## அப்போஸ்தலர் 16:12-15

*- Jerry Bates*

- டிசம்பர் மாத இதழின் தொடர்ச்சி




4. மோசேயின் பிரமாணம் ஒருவரையும் இரட்சிக்க முடியாது என்பது அவளுக்கு கட்டாயம் போதிக்கப்பட வேண்டும்.

5. இப்போது இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு, இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபே.1:7).

எப்படி தேவன் அவளுடைய இருதயத்தை திறந்தார்? இந்த விமர்சனம் வேறு யாரைப் பற்றியும் சொல்லப்படவில்லை (தேவன்).

ஏதா வது, ஒரு புரியாத வழியில்லா இதைச் செய்தார்? நிச்சயமாக இல்லை.

ஒரு எழுத்தாளர் சொன்னார். சுவிசேஷத்திற்கு திரும்பும்படி ஏற்பட்ட விருப்பம் கிருபையினாலே ஏற்பட்ட கிரியை. தேவன் அதை ஒவ்வொருவருக்கும் கொடுக்கவில்லையா? இல்லை என்றால், ஏன் இல்லை? ஒவ்வொருவரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று அவர் விரும்பவில்லையா?

பரிசுத்த ஆவியானவரை நேரடியாக அனுப்பவில்லை. அப்படி எப்போதும் செய்யவேண்டுமென்றிந்தால் இதுவே அந்தவேளை.

1. தேவன் இதை ஒருவருக்குச் செய்திருந்தால் அவர் இதை எல்லோருக்கும் செய்ய வேண்டும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை (ரோம.2:11).

2. ஒரு சிறு கூட்ட பெண்களுக்கு போதிக்கும்படி ஏன் நெடுந்தூரப் பிரயாணமாக நான்குபேரை அனுப்பவேண்டும்.

இருதயம் என்ற வார்த்தை மிகுதியும், புத்திக்கூர்மையைக்குறிப்பதற்காக பயன்படுத்துகிற வார்த்தை.

1. இருதயத்தினாலே மனிதன் (யோவா.12:12) சிந்திக்கிறான் (மத்.9:11) புரிந்துக் கொள்ளுகிறான். (மத்.13:5) காரணங்களைச் சொல்கிறான் (மாற்.2:6) மேலும் நம்புகிறான் (ரோம.10:10).

2. அப்படியாக அவளுடைய இருதயம் தனது மனதாலே சத்தியத்தில் புரிந்துக்கொள்ளுதலுக்கும் விசுவாசத்துக்கும் திறக்கப்பட்டது.

லீதியாளுக்குப் புரிந்து கொள்ளுதல் என்பது வார்த்தையைப் பிரசங்கத்தினாலே வந்தது.

என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் என்னிடத்தில் வரமாட்டான் கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன் எல்லாரும் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே. ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டு கற்றுக் கொள்ளுகிறவன் எவனோ அவன் என்னிடத்தில் வருகிறான் (யோவா.6:44,45).

தேவன் மனிதரையும் தன்னிடமாக இழுத்துக்கொள்ளுகிறார். நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடத்தில் எடுத்துக்கொள்ளுவேன் என்றார் (யோவா.12:32).

2. தேவனுடைய வார்த்தை என்பது தேவனுடைய ஆவி (எபே.1:13)

3. எபிரெயர் 4:11 சொல்லுகிறது. வார்த்தை நம்முடைய இருதயத்தின் நினைவுகளை வகையறுக்கிறதாயிருக்கிறது.

4. பிசங்கிப்பவன் ஒருவன் அவசியம் இருக்கவேண்டும்.



அவன் தேவனோடும் அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவோடும் போரிட்டும், கர்த்தருடைய ஜனங்களைத் துன்புறுத்திக்கொண்டும் தன்னுடைய முந்தைய நாட்களைக் கழித்திருக்கிறான். சத்தியத்தைக் கற்றுக் கொண்டபோதும் தான் ஒரு கிறிஸ்தவனாக மாறும்படிக்கு தேவனுக்குக் கீழ்ப்படிந்த போதும், அவன் தேவனுடைய இரக்கமும் கிருபையும் உண்மையாகவே மிகப்பெரிது என்றும் தான் இரட்சிக்கப்படுவதற்கு பாவிகளில் பிரதான பாவி தான் என்பதையும் உணர்ந்து கொண்டான். அவன் தன்னுடைய கடந்த காலத்தை ஒருபோதும் மறக்கவில்லை. ஆனால் தன்னுடைய மீதியான நாட்களில் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி பந்தையப்பொருளுக்காக முன்னானவைகளை நாடி கடந்த காலத்தை ஈடு செய்யும்படிக்கு அவருடைய பலத்தினாலே எல்லாவற்றையும் செய்யவே இதை அனுமதித்தான்.

என்னுடைய சிநேகிதரே, தேவன் ஒரு மனிதன் நல்மனசாட்சி கொண்டவனாயிருப்பதையே எதிர்பார்த்திருப்பாரானால், எல்லா சமயத்தினரும் நல்மனசாட்சியினை உடையவராயிருந்து இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். இதைப் போல எல்லா சபையினரும் இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். ஜனங்கள் தேவனிடத்தில் விசுவாசம் கொண்டாலும் விசுவாசம் கொண்டிராவிட்டாலும் அவர்கள் இரட்சிக்கப்படமுடியும் என அர்த்தமாகும். இது ஒரு மனிதன் சன்மார்க்கமான வாழ்வின் அடிப்படையில் இரட்சிக்கப்பட முடியும் என அர்த்தமாகிவிடும் அல்லது வெறுமனே நற்கிரியையின் அடிப்படையில் இரட்சிக்கப்பட்டு விடமுடியும் என அர்த்தமாகிவிடும். இது ஒருவன் கிறிஸ்தவனாகவோ அல்லது கிறிஸ்தவனல்லாதவனாகவோ, ஒருவன் சபை அங்கத்தினனாகவோ அல்லது அங்கத்தினனல்லாதவனாகவோ, அல்லது ஒருவன் தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனோ அல்லது விசுவாசமற்றவனோ எப்படியிருந்தாலும் ஒன்றுமில்லை, எல்லா ஜனங்களும் பொதுவாக தங்களுடைய சுய எண்ணத்தை, செயல்களை, சமயத்தை, மற்றும் அநேக காரியங்களை நியாயப்படுத்தும் சுபாவமுடையவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தங்களுடைய மனசாட்சியை பொசுக்கி அல்லது அது அவர்களை தொடர்ந்து இனி குத்திக்கொண்டிருக்கவில்லை என தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்படலாம் (1தீமோ.4:1-5). இது கடைசியாக ஒரு நல் மனசாட்சியை உருவாக்கலாம்.

ஒரு நல்மனசாட்சி மட்டுமே இதன் பதிலல்ல. ஒருவனுடைய இரட்சிப்பிற்கு அது உத்தரவாதமல்ல. ஒருவன் தேவசித்தத்தின் ஞானத்தின் மேல் அடித்தளமிட்டு சரியானபடி வாழ்கிறவனாயிருக்கும் போது தன்னுடைய மனசாட்சியின் மேல் நம்பிக்கை வைக்கமுடியும். ஏனென்றால் ஒருவனுடைய நினைவுகள், செயல்கள், நேர்மையான வாழ்வு போன்றவை தேவனுடைய வார்தையினால் ஆளப்படுகிறது. மனசாட்சியானது தேவனுடைய வார்த்தையினால் வழிநடத்தப்படுகின்றபோது மட்டுமே ஒரு பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்க முடியும். அல்லது இன்னொரு வழியில் இதைக் குறிப்பிட்டால் ஒருவன் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதை விசுவாசிக்கும் போதும் அதன்பின் அவனுடைய மனசாட்சி அவனை குத்தும் போதும், அவன் தேவனுடைய போதனைக்கு விரோதமாக செயல்படும் போது அல்லது கர்த்தர் எதிர்பார்க்கிறபடி வாழாதிருக்கும்போது அவனுடைய மனசாட்சி உயிரோடும் செம்மையாகவும் இருக்கிறது என இது அர்த்தமாகிறது.

வேதாகமம் தேவனுடைய வார்த்தையை உள்ளடக்கியுள்ளது, இது உண்மை, இது சரியானது. இப்போது நாம் ஆவியானவரால் கொடுக்கப்பபட்டுள்ள அந்த

வார்த்தைக்கேற்ப ஜீவிக்கும் போது, அதாவது, நாம் கர்த்தருடைய போதனையோடு ஒத்துப்போகிறவர்களாயிருக்கிறோம் என ஆவியானவரின் வார்த்தை ஏற்றுக்கொள்கிறது அதன்பின் நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் என அறிந்து கொள்வோம். எனவே பவுல் சொல்கிறான், அவன் சொல்வதை கவனியுங்கள். "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோம.8:16). வேறொருவகையில், ஆவியானவரின் வார்த்தை, தேவனுடைய வார்த்தை, ஒரு காரியத்தை சொல்கிறது அல்லது குறிப்பிட்ட காரியங்களைப் போதிக்கிறது, மேலும் நாம் அதற்குக் கீழ்ப்படியத்தவறும் போது அல்லது கர்த்தர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறபடி ஜீவிக்க முற்படும்போது, இது ஆவியானவர் வார்த்தையின் மூலம் திருவுளம் பற்றுகிறார் எனப் பொருள்படுகிறது, அல்லது இது நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கவில்லை அல்லது கர்த்தர் நாம் செய்யும்படி எதிர்பார்த்திருந்தவற்றிற்கு கீழ்ப்படியாதவர்களாயிருக்கின்றோம் என அறிவிக்கின்றது.

அப்படியானால் நல்ல எண்ணங்கள் அல்லது நல்மனசாட்சியை மட்டும் கொண்டிருத்தல் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றோ அல்லது நாம் தேவனுடைய பிள்ளைகளாகயிருக்கிறோம் என்றோ நிரூபிக்கின்றதில்லை. தயவு செய்து கர்த்தர் தம்முடைய வார்த்தையில் உத்தரவிட்டுள்ள வழியைத் தவிர வேறு எந்த வழியிலும் நீங்கள் இரட்சிக்கப்பட முடியுமென நினைத்து வஞ்சிக்கப்பட்டுவிடாதீர்கள். நிச்சயமாக, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அதற்கு நாம் கீழ்ப்படியத்தவறினால், இது நம்முடைய மனசாட்சி உயிர்வாழ்ந்து கொண்டிருக்குமானால், இது தேவன் சொல்லியிருக்கிறகாரியம் நமக்குரியதானால், நம்முடைய மனசாட்சி நம்மை உணர்த்தும் மற்றும் அது அவ்வாறு உணர்த்த வேண்டும் என்று பொருள்படுகிறது. நாம் தேவனோடு காரியங்களை சரியாக உருவாக்க வேண்டுமென்று இது ஒரு சிறந்த நினைப்பூட்டுபவையாக இருக்கிறது. நாம் அதைச் செய்யும் போது, நாம் அவருடைய சித்தத்தோடு ஒரு மித்துதிருக்கிறோம் என அறிகிறோம், இது நல்ல எண்ணங்களை, நல் மனசாட்சியை உருவாக்குகிறது, ஆனால் நாம் தேவனுடைய சித்தத்தை அறிகிறோம் என்ற அடிப்படையிலும் நாம் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறோம் என்ற அடிப்படையிலும் மட்டுமே இருக்கவேண்டும். இந்த அறிவின் அடிப்படையில் நாம் ஒரு நல்லமனசாட்சியை பெற்றிருக்க வேண்டும், இதன் மூலம் மட்டுமே நாம் சந்தோஷமாக இருக்க முடியும்.

நீங்கள் நல் மனசாட்சியுடையவர்களாயிருக்கிறீர்களா? தேவனுடைய சித்தத்தை அறிவீர்களா? அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிந்து இருக்கிறீர்களா? இல்லையென்றால், உங்களுடைய மனசாட்சி உங்களை குத்திக் கொண்டிருக்கிறதெனவும் மேலும் அது கர்த்தருக்கு நீங்கள் கீழ்ப்படியும் வரையும் தொடர்ந்து குத்திக்கொண்டிருக்குமெனவும் நாம் நம்புகிறோம். கிறிஸ்துவை விசுவாசிப்பீர்களென்றால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது கர்த்தர் உங்களை இரட்சித்து, உங்களை தம்முடைய பிள்ளையாகவும் தம்முடைய குடும்பமாகிய சபையில் ஒரு அங்கத்தினனாகவும் ஆக்குவார் (மாற்.16:16, அப்.2:38; கலா.3:26,27; அப்.2:47). இதை நீங்கள் செய்வீர்களென்றால் நீங்கள் நல் மனசாட்சியை பெறமுடியும், அதில் உங்களுக்கென்றுள்ள கர்த்தருடைய சித்தத்தை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்



| | |
|---|---|
| 40.K.M.சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 41.Mrs.ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |
| 42.S.தங்கம் | - கன்னியாகுமரி |
| 43.P.சந்திராடேனியேல் | - நஞ்சான்குளம் |
| 44.S.சாந்தகுமாரி | - நாசரேத் |
| 45.Mrs.பிரேமாதிவாகரன் | - தூத்துக்குடி |
| 46.R.ஆன்டனியம்மாள் | - தூத்துக்குடி |
| 47.Mrs.ரூபல்யா | - நாசரேத் |
| 48.B.ஞானதீபம் | - இடையான்குடி |
| 49.Mrs.தேவபுஸ்பம் | - வாளையடி |
| 50.Mrs.அன்புகமலம் | - சிவகங்கை |
| 51.Mrs.பாலின் மார்ட்டின் | - காரைக்குடி |
| 52.A.ரெபேக்காள் | - மதுரை |
| 53.T.ராஜாத்தி | - கோம்பை |
| 54.E.அதிசயம் | - பனைகுடி |
| 55.Tmt.மரகதம்திரவியம் | - கோம்பை |
| 56.J.ரேச்சல் தமிழரசி | - பசுமலை |
| 57.S.சீமோன் | - கே.சி.புதூர் |
| 58.R.ஞானசிரோன்மணி | - சமயநல்லூர் |
| 59.S.ஜெயராஜ் | - பொள்ளாச்சி |
| 60.J.ஆலிவ் | - கோவை |
| 61. A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 62.A.கிரேஸ்ஜெயந்தி | - குமாரபாளையம் |
| 63.Mrs.நவரத்தினம் ஞானராஜ் | - நாசரேத் |
| 64.N.ஜெபதாய் | - நாசரேத் |
| 65.Mrs.இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 66.S.ஆசிர் துரைராஜ ஜெயசிங் | - நாசரேத் |
| 67.Mrs.ஜெனிதர்மராஜ் | - திருநெல்வேலி |
| 68.Mrs.கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 69.K.S.மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 70.Mrs.குளோரி ஃபவுல்சர் | - சென்னை |
| 71.Mrs.ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 72.Mrs.ஞானம்பிலிப் | - கோவை |
| 73.Mrs.பிரமிளா ரேவதி | - கோவை(ஆஸ்திரேலியா) |

| | |
|---|---|
| 40.K.ரத்தினாபாய் பிரசாத் | - மதுரை |
| 41.Mrs.ஜெயமணி ராஜம்மாள் | - கடலூர் |
| 42.J.செல்வராஜ் | - புதியம்புத்தூர் |
| 43.Mrs.ருக்மணிஜெயசீலன் | - பன்னைப்புரம் |
| 44.Sis.கஸ்தூரி | - ஒட்டாநத்தம் |
| 45.Mrs.ரூத் ஜெயராணி | - திருநெல்வேலி |
| 46.M.ராமச்சந்திரன் | - ஒட்டாநத்தம் |
| 47.S.R.பெரியசாமி | - சே஝ூர் |
| 48.T.ராஜாத்தி | - கோம்பை |
| 49.E.ஜாய்ஸ்ஹெலன் | - சென்னை |
| 50.Mrs.ராஜம்மாள் | - திருப்பூர் |
| 51.Mrs.தேவதாதேவப்பிரியம் | - சென்னை |
| 52.R.அனிதா நெகேமியா | - ரெட்டியார்பட்டி |
| 53.Mrs.ஷீலா அலெக்ஸ் | - கன்னியாகுமரி |
| 54.J.விக்டர் சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 55.Mrs.மிர்ரீட்டா ஜெரின்ஸ் | - திருச்சி |
| 56.Mrs.லீமா ரோஸ் | - சென்னை |
| 57.Mrs.ஜெயா மேரிதாய் | - திண்டுக்கல் |
| 58.Mrs.பொன்னிவிக்டர் | - திருப்பூர் |
| 59.S.பிளாரன்ஸ் ஸ்டெல்லா | - வள்ளியூர் |
| 60.S.A.சாமுவேல் | - பரமத்திவேலூர் |
| 61.Mrs.சாந்தாபழனி | - தருமபுரி |
| 62.Mrs.ஞானம் பிலிப் | - கோவை |
| 63.A.K.ஜெயா | - கன்னியாகுமரி |
| 64.K.M.சாந்தி | - எம்.வாடிப்பட்டி |
| 65.Mrs.சந்திராதானியேல் | - நஞ்சான்குளம் |
| 66.Miss.சாந்தாதேவி | - பன்னைப்புரம் |
| 67.A.டேவிட் ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 68.N.ஜெபத்தாய் | - நாசரேத் |
| 69.Mrs.இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 70.Mrs.ஜாய்கமலம் | - நாசரேத் |
| 71.D.டயானா நேதாஜி | - கூடன்குளம் |
| 72.S.பிரமிளாரேவதி | - கோவை (ஆஸ்திரேலியா) |
| 73.J.ரேச்சல் தமிழரசி | - மதுரை |
| 74.R.ஞானசிரோன்மணி | - மதுரை |
| 75.K.ராஜேஸ்வரி | - புலியூர் |
| 76.C.ரேவதி | - பாண்டமங்களம் |
| 77.S.கலைச்செல்வி | - பெரியபட்டி |
| 78.L.மிஸ்மா | - பெரியபட்டி |
| 79.S.லாவன்யா | - பாண்டமங்களம் |
| 80.K.ஜீவாமிர்தம் | - பாண்டமங்களம் |
| 81.P.சரஸ்வதி | - பரமத்திவேலூர் |
| 82.Sis.சித்ராமுருகன் | - வெங்கரை |
| 83.B.ஸ்டெல்லாம்மாள் | - கூத்தூர் |

**நம்பிக்கை TV சேனலில்**
**ஒவ்வொரு வாரமும்**
**திங்கள் மற்றும்**
**சனிக்கிழமைகளில்**
**மாலை 7.30 மணி முதல்**
**'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்'**
**நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**
**9443558041**

**தினமும் வேதம் வாசியுங்கள்**

தேவ செய்திகள் அடங்கிய
CD & DVD எங்களிடம்
உள்ளது ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள்
உங்கள் முகவரி மற்றும்
மொபைல் எண்ணை SMS
பண்ணவும். 9443558041

